தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

ஆண்டிறுதிப் பரீட்சை 2024

ஆண்டு: 6 **திகதி**: 23.11.2024

நேரம்: 02:00 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா
உதவி ஆசிரியர்: திருமதி ஜனனி எலியேசர்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	20	
வினா 2	20	
வினா 3	15	
வினா 4	10	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	20	பக்கம்	2

1. கீழே உள்ள பாடலை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்குப் பூரணமான விடை எழுதுங்கள்.

1.1 **தூங்கும் விதம்**

ஒட்டகச்சிவிங்கி நின்றுகொண்டே நன்று தூங்கிடும்
உயரே வௌவால் தலைகீழாகத் தொங்கித் தூங்கிடும்
சிட்டுக்குருவி மரத்தின் கிளையைப் பற்றித் தூங்கிடும்
சின்னப் பாப்பா தொட்டிலுக்குள் படுத்துத் தூங்கிடும்
கண்ணை மூடி நாம் எல்லோரும் நன்கு தூங்குவோம்
கண்ணைத் திறந்தபடியே மீனும், பாம்பும் தூங்கிடும்
என்ன காரணத்தினாலே என்று தெரியுமா?
இவைகளுக்கு கண்ணை மூட இமைகள் இல்லையே!

1. சின்னப் பாப்பாக்கள் எங்கே தூங்குவர்?

_____

2. இப்பாடலில் கண்திறந்தபடி தூங்கும் உயிரினங்கள் என்ன என்று பாடல் ஆசிரியர் கூறுகிறார்?

_____

3. இப்பாடலில் கூறப்பட்ட தலைகீழாக தொங்கித் தூங்கும் விலங்கு என்ன?

_____

4. பாம்பும், மீனும் ஏன் கண்ணைத் திறந்தபடி தூங்குகின்றன?

_____

5. நின்று கொண்டே தூங்கும் மிருகம் எது?

_____

1.2 கீழேயுள்ள பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பூரணமான விடை எழுதுங்கள்

உடற்பயிற்சி

சிறியோரும், பெரியோரும் அவரவர் வயதிற்கு ஏற்ப உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

வேகநடை, மெதுவோட்டம், சைக்கிள் ஓடுதல், நீச்சல், தோட்டவேலை என்பன நல்ல உடற்பயிற்சியாகும்.

பாடசாலை மாணவர்கள் கூடைப்பந்து, வலைப்பந்து, கால்பந்து, துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுகளை விளையாடி உடற்பயிற்சி செய்யலாம்.

விளையாட்டுக்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஏற்கும் பண்பு, பரஸ்பர நட்பு போன்ற நல் மனப்பான்மைகளையும் வளர்க்கின்றன.

பாரதியார் பாப்பாப் பாடலில் ஓடிவிளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்று பாடியுள்ளார்.

1. பெரியவர்களுக்கு உகந்த உடற்பயிற்சிகள் இரண்டு தருக.

_____

2. பாடசாலை மாணவர்களுக்கு உகந்த உடற்பயிற்சிகள் இரண்டு தருக.

_____

3. உடல் ஆரோக்கியம் - ஒத்தகருத்துச் சொல் ஒன்று தருக.

_____

4. விளையாட்டுக்களால் ஏற்படும் நல் மனப்பான்மைகள் இரண்டு தருக.

_____

_____

5. பாப்பாப் பாடலைப் பாடிய கவிஞர் யார்?

_____

(10 x 2 = 20 புள்ளிகள்)

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	5

2.1 பெயராகவும், வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்.

1. படி

   பெயர்: _____

   வினை: _____

2. ஆடு

   பெயர்: _____

   வினை: _____

3. கரை

   பெயர்: _____

   வினை: _____

(3 x 4 = 12 புள்ளிகள்)

2.2 விடை தருங்கள்.

சேர்த்து எழுதுங்கள்:

1. குருவி + கூடு = _____

2. மழை + துளி = _____

பிரித்து எழுதுங்கள்:

3. அழைப்பிதழ் = _____

4. பழரசம் = _____

5. மாணவர்கள் பாடம் படித்தனர். இவ்வாக்கியத்தின் செயற்படுபொருள் என்ன?

_____

6. அரசர் குடிமக்களைச் சந்தித்தார். இவ்வாக்கியத்தின் எழுவாய் யாது?

_____

7. தூக்கம் என்பதற்கு ஒத்தசொல் ஒன்று தருக.

_____

8. குழந்தை அழுதது. அழுதது என்பதன் எதிர்ச்சொல் தருக.

_____

(8 x 1 = 8 புள்ளிகள்)

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	6

தனது தந்தையாரின் சுகவீனத்தால் கவலையடைந்து படிப்பில் கவனம் செலுத்தாமலும், பாடசாலைக்கு ஒழுங்காக வராமலும் இருக்கும் உங்கள் உற்ற நண்பனுக்கு கல்வியின் அவசியத்தைக் கூறி அறிவுரைக் கடிதம் ஒன்று எழுதுங்கள்.

வினா இல	4	புள்ளிகள்	10	பக்கம்	7

கீழே தரப்பட்ட படங்களை உபயோகித்து 1 முதல் 10 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யுங்கள்.

1. மாணவர்கள் விடுமுறை முடிந்து _____ திரும்பினார்கள்.

(a) பாடசாலை

(b) கோவில்

(c) வீடு

(d) சந்தை



2. கண்மணி _____ பெய்ததனால் குடை பிடித்து வெளியே சென்றாள்.

(a) வெயில்

(b) தூசு

(c) காற்று

(d) மழை



3. கன்பராவில் இருந்து தாத்தா _____ பயணம் செய்தார்.

(a) தொடருந்தில்

(b) மோட்டார் வண்டியில்

(c) ஆகாய விமானத்தில்

(d) பேருந்தில்



4. புயல் காற்றினால் _____ கீழே சரிந்து விழுந்தன.

(a) மரங்கள்

(b) வீடுகள்

(c) கடைகள்

(d) மனிதர்கள்



5. மேடையில் _____ பாட்டுப் பாடினான்.

(a) பாடகன்

(b) பாடகி

(c) சிறுமி

(d) பெண்



6. அப்பா மதிய உணவிற்காக _____ சாப்பிட்டார்.

(a) சோறும் கறியும்

(b) பாணும் முட்டையும்

(c) பாலும் பழமும்

(d) குளிர் பானம்



7. வாணியும் அம்மாவும் _____ பார்த்து ரசித்தனர்.

(a) வானொலியில் பாடல்

(b) கதைப் புத்தகம்

(c) தொலைக்காட்சியில் திரைப்படம்

(d) உணவு



8. வேலை முடிந்து திரும்பிய அக்கா தனது _____

(a) கால் கழுவினார்

(b) உடல் கழுவினார்

(c) வீடு கழுவினார்

(d) முகம் கழுவினார்



9. கண்ணன் அணி _____ போட்டியில் வெற்றி பெற்றது.

(a) உதைப்பந்தாட்டப்

(b) துடுப்பாட்டப்

(c) நீச்சல்

(d) ஓட்டப்



10. யுத்தம் காரணமாக _____ இடிந்து தரைமட்டமாகின.

(a) மரங்கள்

(b) பூக்கள்

(c) வாகனங்கள்

(d) கட்டிடங்கள்



வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	9

தொடக்கப்பட்ட கீழ்வரும் கதையை 50 சொற்களுக்குக் குறையாது தொடர்ந்து எழுதிமுடியுங்கள்.

2024ம் ஆண்டு எமது தமிழ்ப்பாடசாலையின் கலைவிழா ஜேம்ஸ்றூஸ் விவசாய உயர்தர பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றது. நான் எனது வகுப்பு நாடகத்திலும், பாடற்குழுவிலும் பங்குபற்றினேன். அழகாக தமிழ் கலாசார உடை அணிந்து நானும் எனது பெற்றோரும் விழாவுக்குப் புறப்பட்டோம். நான் தமிழ்மொழி வாழ்த்து பாடற்குழுவில் இருந்ததால் சரியாக இரண்டு மணிக்கு மண்டபத்தில் நிற்கவேண்டும். அன்று கடும் மழையினால் வீதியில் வாகன நெருசல் மிகவும் அதிகமாக இருந்தது, நேரம் போய்க்கொண்டே இருந்தது . . . . . .

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	10

பின்வரும் தலைப்பில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

1. தந்தையர் தினம்
2. தமிழ்க் கவிஞர் பாரதிதாசன்
3. தமிழர் கலாசாரப் பண்புகள்
4. அவுஸ்திரேலியாவின் காலநிலை
5. விளையாட்டுக்கள்